மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 30, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

30—

ஆலங்குளம் தொகுதியில் பழுதடைந்த பாலங்களைப் புதுப்பித்தல்

* **17553**—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதிக்கு உட்பட்ட சிற்றாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள வி.கே.புதூர், அகரம், நெட்டூர் பாலங்களானது அண்மையில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த பாலங்களைக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பாலங்கள் சீர்செய்யப்பட்டு, தற்போது போக்குவரத்து தடையின்றி நடைபெற்று வருகிறது.

முற்பகல் 10-45

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளச் சேதத்தினால் எங்கள் பகுதியிலே வி. கே. புதூர், அகரம், நெட்டூர் என்ற மூன்று பாலங்களும் சேதம் அடைந்தபோது பஸ் போக்குவரத்து மிகவும் தடைபட்டது. அந்தச் சமயத்தில் வெள்ளச் சேதத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் 3 பாலங்களும் சீர் செய்யப்பட்டு உள்ளன. ஆனால் அந்தப் பாலங்கள், - பொது மக்களுக்கு பணியாற்றிய போதிலும் - அவசரம் அவசரமாக அந்த நேரத்திலே போடப்பட்டது. இன்னொரு வெள்ளம் வந்தால் அவை சேதம் அடையாமல் இருக்க வேண்டும் என்று சொன்னால் இன்னும் கொஞ்சம் நல்ல முறையிலே அவை போடப்பட வேண்டும். அந்தப் பாலங்களில் அலைகள் எல்லாம் பாயும்பொழுது அவைகள் உடைந்துவிடாமல் இருக்க சரியான முறையிலே கட்டுவதற்கு கூடுதலாக பணம் ஒதுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1995 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற 3 பாலங்களும் வெள்ளச் சேதத்திலே பாதிக்கப்பட்டபோது உடனடியாக அரசு துரித நடவடிக்கை எடுத்தது. இந்த வி. கே. புதூர் பாலம் தாம் போகி பாலம். அதை நாங்கள் சீரமைத்து இருக்கிறோம். அதைப்போல நம்முடைய அகரம் பாலத்திலே அப்ரோச் ஸ்லாப் போன்றவைகளை அமைத்து அந்த பாலத்தையும் சீரமைத்து இருக்கிறோம். அதைப்போல நெட்டூர் பாலத்திலும் அணுகு சாலை மற்றும் தடுப்புச் சுவர் கட்டுகின்ற பணியை ஏற்கனவே செய்திருக்கிறோம். உடனடியாக வெள்ள நிவாரணப் பணியிலே செய்யப்பட்டது. இது சம்பந்தமான விவரங்களை அதிகாரிகளிடத்திலே நான் பெற்று மேலும் அந்தப் பாலங்களை ஸ்ட்ரென்த்தன் செய்வதற்கு, அதாவது அவற்றை மேலும் பலப்படுத்துவதற்கான வழிமுறைகளை அரசு எடுக்கும். அது சம்பந்தமான ஆலோசனைகளை, எப்படிச் செய்யலாம் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே தனியாக எழுதித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அவர் கொடுக்கின்ற அந்தக் குறிப்பை வைத்து அதிகாரிகளோடு கலந்து பேசி போக்குவரத்திற்கு என்றைக்குமே நிரந்தரமான பிரச்சினை இல்லாத அளவுக்கு அந்தப் பாலங்களை சீரமைப்பதற்கு இந்த நிதி ஆண்டில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 31, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

31—

தஞ்சாவூருக்குப் பாசன வசதி அளிக்கும் திட்டம்

*** 22629—** திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி பொதுப் பணித்துறை திட்ட அலுவலகத்தின் மூலம் தஞ்சாவூருக்கு பாசன வசதி அளிக்கும் கோரையாறு திட்டம் 1987-ஆம் ஆண்டே அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டும், அத்திட்டம் நிறைவேறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திட்டம் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,